அருமைத் தலைவர் வருகைப் பாமாலை



இந்திய குடியரசுத் தலைவர்,
24.9.2006 அன்று
கோவிலூர் வருகை தந்த நினைவு
அன்பளிப்பு

வெளியீடு

மெ.மெ. மெய்யப்பன்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307
காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

அருமைத் தலைவர் வருகைப் பாமாலை



இந்திய குடியரசுத் தலைவர்,
24.9.2006 அன்று
கோவிலூர் வருகை தந்த நினைவு
அன்பளிப்பு

வெளியீடு

மெ.மெ. மெய்யப்பன்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307
காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

உ
சிவமயம்

காணிக்கை

கோவிலூர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் மகாஞானி. பல்நோக்கும் திறங்களும் கொண்டவர்கள். பசிதீர்க்கும் பணி, கல்விப்பணி, மொழிப்பணி, இறைப்பணி என்று எல்லாத் துறைகளிலும் அறங்கள் செய்து வருகிறவர்கள்.

அவர்கள் நம் இந்தியக் குடியரசுத் தலைவர்பால் பேரன்பு கொண்டவர்கள். இருவர் மனமும் ஒத்த நிலை உடையன. நம் இந்திய மக்கள் தலைவர் நம் கோவிலூர்த் திருமடத்திற்கு வருகை தருவது நாம் பெற்ற பெரும்பேறு. அவர்களை வரவேற்கும் பொருட்டு இந்தச் சிறு நூலை குருமகா சந்நிதானம் அருள் ஆசியுடன் வெளியிடுகிறோம்.

இந்நூலை குருமகா சந்நிதானம் திருமலரடிக்குக் காணிக்கை ஆக்குகின்றோம்.

மக்கள் தலைவர்
வருகைப் பாமாலை

1. கண்ணாற் கண்டது கைசெய்யும்
கருத்திற் கொண்டது உருவாகும்
எண்ணம் நிறைந்தது இறைப்பணியே
எங்கள் சாமி குணமிதுவே.

2. எண்ணுவ தெல்லாம் நலந்தானே
எண்ணிய எல்லாம் செயலாகும்
புண்ணியர் இங்கே வரவேண்டி
மனத்தின் நினைப்பு நடந்தாச்சே.

3. சென்ற ஆண்டின் அழைப்பதனைச்
சிந்தை கொண்டு எங்கள்பால்
இன்றே வந்தீர் உம்பெருமை
உரைக்கும் வார்த்தை எமக்கில்லை.

4. குன்றே அணையீர் கோவில்சார்
கலைகள் காண வருவீரே
நன்றே வளரும் திருமடமும்
நன்றி சொன்னோம் உம்மடிக்கே!

5. இறைசார் கலைகள் அழியாமல்
இங்கே சாமி வளர்க்கின்றார்
நிறைமொழி மாந்தர் திருமுறைகள்
நித்தம் ஒலிக்கும் மந்திரங்கள்

6. இறைஉருச் செதுக்கும் உளியோசை
தவிலுடன் நாதம் தவழ்ஓசை
அருள்மிகு கோவில் ஊர்தனிலே
பெருகி வளர வைப்பீரே!

7. மழலைச் செல்வம் மனம்வளரும்
மாண்டி சோரிக் கல்விமுறை
வளர்க்கும் எங்கள் சாமியுடன்
வளர்க்க வருவீர் வருவீரே!

8. இயல்பாய் வளரும் திறமைகளை
அணைத்து வளர்க்கும் அன்புவழி
செயல்முறை சிந்தனை தன்முயற்சி
தழைக்க வளர்க்கும் கல்விமுறை

9. உள்ளே உள்ள திறன் எல்லாம்
வெளியே கொணரும் பயன்கல்வி
உள்ளே திணித்து வழிமறிக்கும்
உதவாக் கல்வி இதுவல்ல!

10. நகைப்பும் சிரிப்பும் விளையாட்டாய்
நல்ல பயிரைத் தருங்கல்வி
திகைக்க வைத்து சுமைசேர்க்கும்
சில்லறைக் கல்வி இதுவன்று.

11. திசைதிசை கிராமம் வரையிதனைச்
சேர்க்க எண்ணும் சாமியுடன்
இசைந்த விருப்பம் கொண்டவரே
இணையில் தலைவா வருவீரே!

12. இனம்இனத் தைச்சே ரும்என்பர்
இருவரும் நல்ல அருளாளர்
எனவே சேர்ந்தார் நலம்பெறவே
எல்லார் வாழ்வும் ஒளிபெறவே.

13. அழைத்தவர் வந்தவர் இருவருமே
இமயம் அனைய பெருமான்கள்
இளைஞர் வாழ்வின் முன்னேற்றம்
இவர்கள் கண்ணின் மணியாகும்.

14. இருவர் வயதும் அதிகந்தான்
இறக்கை கட்டிப் பறக்கின்றார்
இருவர் கனவும் மிகப்பெரிது
எல்லாம் கைகூடும் மிகவிரைவில்.

15. சிறுவர் தமக்காய்த் தினம் உழைக்கும்
சீரியர் இவர்தான் வணங்குதுமே!
திருவுடைப் பெரியார் இவரன்றோ
தெளிவு இவரைக் காணுதலே!

16. திருவொடு அறிவும் இவருடையார்
தெவிட்டா அன்பும் உளம் உடையார்
மருவில் குழந்தை மனமுடையார்
மயக்கும் மென்னகை முகம் உடையார்.

17. குருவை மதிக்கும் குணம் உடையார்
கனிவாய் அணைக்கும் கரம் உடையார்
சிறுமை எதிர்க்கும் திறம் உடையார்
சிகரம் நிற்கும் புகழுடையார்!

18. உளத்தால் உடலாற் செயலாலே
உண்மைத் துறவி இருவருமே
வளத்தால் அகந்தை சிறிதில்லார்
வளரும் பயிர்க்கு மழைஆனார்.

19. நலந்தான் யார்க்கும் நாடிடுவார்
நல்லவர் எண்ணம் நடந்தேறும்
குலந்தான் உயர்ந்திடக் கைகொடுப்பார்
குன்றின் விளக்காய் இருப்பாரே!

20. தனக்கென ஆசைக் குணம் இல்லார்
தருமம் தழைக்க உழைக்கின்றார்
பிணக்குடன் பேதம் மனதில்லார்
பிள்ளைகள் உயர்ந்திடத் தலைநின்றார்.

21. இளமையில் வறுமை பொல்லாது
இச்சொல் இவரிடம் செல்லாது
வளமை புகழும் பெற்றார்கள்
வருத்தம் பாரா உழைப்பாலே.

22. மழலை கேட்டால் மகிழ்வாமே
மலரும் முகங்கள் இயல்பாக
குழந்தைச் செல்வம் இவர்க்கில்லை
குணத்தாற் கொண்டார் குவலயமே!

23. இருவர் வாழ்விற் குழந்தையில்லை
இவர்கள் காதலே குழந்தைதான்
இருவரும் மனத்தால் இளைஞர்களே
இருவர் மனதிலும் இளைஞர்களே!

24. மனித இலக்கணம் இவர்தாமே
மாந்தருள் தேவர் கண்டோமே
புனிதர் இவர்கள் இருவருமே
பூக்கும் மனங்கள் பார்த்தாலே!

25. மனவளம் தருமே எவ்வளமும்
மண்வளம் நறுந்தமிழ்ப் பண்பன்றோ!
குணநலம் மிக்கவர் இவரைக்கை
கூப்பி வணங்கிட வருவீரே!

26. துறவு என்பது விரிஉறவு
துறந்தார் இவர்கள் துயரத்தை
மறந்தார் இல்லை மனிதத்தை
முறித்தார் பிறஉயிர்த் துன்பத்தை

27. ஆழ்ந்து அகன்ற சிந்தனையால்
ஆலும் அரசும் ஆனவர்கள்
ஆழ்ந்து கடலின் முத்தெடுத்தே
அகிலம் வளரத் தந்தவர்கள்.

28. அன்பே வாழ்வாய்க் கொண்டவர்கள்
உளத்தாற் கரவா உத்தமர்கள்
பண்பின் சிகரம் இருவருமே
பார்வை பட்டால் புண்ணியமே!

29. ஆழக் கிணறு நீர் ஆனீர்
ஆணும் பெண்ணும் நீர்பருக
வாழும் உயிர்கள் அனைத்திற்கும்
வாரி வழங்கும் இறைபோலே!

இந்த இரண்டு வரிகள் - மாட்சிமை தங்கிய இந்திய மக்கள் தலைவர் **அப்துல் கலாம்** அவர்களின் ஆங்கிலத் கவிதையின் கருத்தைக் கொண்டு எழுதியது -

"I am a well in this great land
Looking at its millions of boys and girls
To draw from me.
The inexhaustible divinity
And Spread His grace everywhere
As does the water drawn from a well"

- Wings of Fire -

ஊருணி நீர் நிறைந்தற்றே-உலகு அவாம்
பேர் அறிவாளன் திரு.

குறள் - ஒப்புரவு அறிதல் அதிகாரம்

30. கடற்கரை மணலிற் காற்றூதக்
கீதம் பாடும் சங்கெனவே
உடைமை கருதா உத்தமர்கள்
உளத்தால் வாழ்வார் கோன்போலே.

இதுவும் மேதகு இந்திய நாட்டின் தலைவர் அவர்களின் கவிதைக் கருத்தை உள்வாங்கி எழுதப்பெற்றது -

On the coast of Coromandel
Where the earthy shells blow,
In the middle of the sands
Lived some really rich souls.
One cotton lungi and half a candle-
One old jug without a handle
These were all the worldly possessions
Of these kings in the middle of the sands.
- H.E. The President

அல்லல்அருள் ஆள்வார்க்கு இல்லை;
வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.
குறள் - அருள் உடைமை அதிகாரம்

31. நல்ல கவிஞர் நம் தலைவர்
நாடே போற்றும் விண்ணறிஞர்
உள்ளத் தூய்மை மிகுதுறவி
ஒழுக்க வாழ்வின் வழிகாட்டி

32. பிள்ளைக் குணத்தாற் பெருஞானி
பேதம் இல்லா மெய்ஞானி
எல்லார்க் குதவும் அருந்தொண்டர்
இவரைப் பெற்றது நம்தவமே!

33. இருவகை ஞானம் இவர் உடையார்
எண்ணில் விண்கலம் இவர் படைத்தும்
இறைவன் செயலே என்றுணரும்
மெய்விஞ் ஞானி இவரன்றோ!

34. ஒரு விதப் பேதம் இவர்கொள்ளார்
ஒன்றே எல்லாம் என்றறிவார்
பெரும சிறுமை பாராட்டா
மனித நேய மாமணியே!

35. உள்ளத் தெளிவு, உழைப்புறுதி
உண்மை ஒழுங்கு உயிரன்பு
கொள்கைப் பிடிப்புக் கொண்டதனால்
குன்றில் விளக்காய் ஒளிர்வாரே!

36. குறளும் கீதையும் ஒன்றாகிக்
குணத்தை வளர்த்தன நன்றாக
இறையும் அறிவும் கூட்டாகி
உயர வைத்தன உனைத்தானே!

37. கூர்செய் சாணைக் கல்லாகக்
குர்ரான் குறளும் கீதையுமே
நீர் கைக் கொண்டீர் நீள்நிலத்தே
நித்தம் வாழ்வீர் புகழ்உடனே!

38\. வள்ளுவர் சொல்லை உள்வாங்கி
வாழும் வாழ்க்கை என்பதனால்
எள்ளிய மாந்தர் முன்நிமிர்ந்து
எண்ணில் வெற்றி குவித்தீரே!

39\. இசையும் தமிழும் இணைந்தாடி
இன்பம் சேர்க்கும் உம்வாழ்வில்
நசையும் கசப்பும் இல்லாதாய்
நன்னீர் மழையாய்க் காப்பீரே!

40\. தெள்ளிய நீரின் ஓட்டமென
தேக்கம் இன்றி வாழ்வதனால்
உள்ளீர் எல்லார் உள்ளத்தும்
உத்தமர் வாழ்வீர் பல்லாண்டே!

41\. தோல்வி கண்டு துவளாதார்
தோல்வியைத் தோல்வி பெறவைத்தார்
வாழ்வில் முயற்சி தாழாதார்
வானை வெற்றி கொண்டாரே!

42\. இளைஞர் வாழ்வின் ஏற்றந்தான்
இந்திய நாட்டை வலிதாக்கும்
வளரும் அறிவே சொத்தென்றார்
வளர்க்கும் முனைப்பில் தலைநின்றார்.

43. தன்னைக் காக்கும் திறனில்லார்
தளைகள் இல்லா வாழ்வில்லார்
திண்ணென வீரம் பெற்றாலே
தலைகள் வணங்கும் தன்னாலே!

44. மண்ணில் சுதந்திரம் காத்திடவே
விண்வெளிச் சக்தி பெறவேண்டும்
என்றொரு மந்திரம் சொன்னாரே
ஏற்றம் வரவே கண்டோமே!

45. வலிய நாடாம் அமெரிக்கா
வருந்தி வேண்டும் நம்உறவை
நிலையில் நம்மை வைத்தாரே
நெடிய நோக்குக் கொண்டவரே!

46. தாமும் நாட்டைத் தாங்கிடவே
தலைமை ஏற்ற தனித்தலைவா
வாழும் முறைவாழ் தெய்வதமே!
வாழ்க! வாழ்க! பல்லாண்டே!

47. நூறு கோடி மாந்தருள்
நுரைபோல் பொங்கி வழிவார்க்கு
யாரும் உண்மைத் துணையில்லை
அல்லல் போம்வழி காட்டிடவே.

48. நூறும் மேலும் வாழ்ந்தார்கள்
நுந்தை அதுபோல் நீங்களுமே
நூறும் நூறும் வாழ்வீரே!
நல்லவை எல்லாம் ஓங்கிடுமே!

49. தேடி வருகுது தென்முத்து
திளைக்கக் கொட்டுது தேன்அருவி
கூடி வந்திடுங் களிப்போடு
கூப்பி நிற்போம் வருவீரே!

50. அன்பின் அரசே வருவீரே!
அப்துல் கலாமே வருவீரே!
பண்பின் நிறைவே வருவீரே!
பார்புகழ் வேந்தே வருவீரே!



அச்சு : திருமகள் அச்சகம், காரைக்குடி - 1. ✆ 232991



கோவிலூர் ஆதீனம்
சீர் வளர் சீர்
நாச்சியப்ப ஞானதேசிக
சுவாமிகள்